Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு ஆனிமீ உஅஉ வெள்ளிக்கிழமை (12 July. 1963) [ஜூல-கரு]

# கல்லை வணங்கும் கடவுள் வணக்கம்

## கேலி செய்தவர் வெட்கித் தலை குனிந்தனர்

"விக்கான்" தோட்டத்தில் நடைபெற்ற விவேகானந்தர் நூற்றாண்டு விழாவில் தலைமை தாங்கிய சைவநீதிக் கழகத்தலைவர் திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.

"வங்கச் சிங்கம் சுவாமி விவேகானந்தரை பொருள் கொடுத்து உதவி அமெரிக்காவில் நடந்த சர்வமத மகா சபையில் இந்துசமய விரிந்த கருத்துக்களை எடுத்து உரைக்க அனுப்பிய பெருமை தென்னாட்டுத் தமிழனுக்கே உரியது".

"தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று மணிவாசகப் பெருமான் பாடிப்போந்த விரிந்த பரந்த கருத்துக்களை, இந்துசமயக் கருத்துக்களை எடுத்துரைத்தார். உலகில் உயர்ந்த மதம் இந்து மதம் என எல்லோரும் உணர்ந்தனர். சிக்காகோ நகரத்தில் அன்று கூடி இருந்த பல மதப் பாதிரிமார்களும் வியந்தனர். "நியுயாக் தூதன்" போன்ற பத்திரிகைகள் "விவேகானந்தரே மிகவும் சிறந்தவர், இந்தியாவிற்கு சமயப் பிரசாரத்திற்கு பாதிரிகளை அனுப்புவது பெரும் முட்டாள் தனம்" என்று எடுத்துரைத்தன.

### விக்கிரக வணக்கம்

விவேகானந்தர் ஒரு நாள் ஓர் ஆங்கில நண்பரிடம் விருந்தாளராகப் போய் இருந்தார். ஆங்கில நண்பர் "நீங்கள் கல்லையும் மண்ணையும் கட்டி அழும் மதத்தினர் தானே!" என்று விக்கிர வணக்கத்தைக் கேலி செய்தார். சில விநாடிகளில் வேலைக்காரன் தேனீர் கொணர்ந்து கொடுத்தான். தேனீரை வாங்கிக்கொண்டு சுவாமிகள் வேலைக்காரனை முன்னால் தொங்கிய எஜமானின் படத்தை எடுக்கச் சொன்னார். வேலைக்காரன் எடுத்தான்.

சுவாமி அந்தப்படத்தின் மேல் துப்பும்படி கட்டளை இட்டார். வேலைக்காரன் தயங்கினான். சுவாமி நண்பனைப்பார்த்து உமது வேலைக்காரன் ஏன் தயங்குகிறான்? என்று கேட்டார். பார்த்தீர்களா வேலைக்காரன் உங்களுக்குக் கொடுக்கும் மரியாதையை, உங்கள் படத்திற்கும் கொடுக்கிறான். இதே போன்று நாங்களும் விக்கிரகத்திற்குச் செய்யும் வணக்கம் கடவுளுக்கே என்று விளக்கினார்.

### நாவலர் உவமானம்

நாவலரும் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராக இருந்த ஒரு ஆங்கிலேயரும் நண்பர்கள். ஒரு நாள் காலை நாவலர் தன் வீட்டிற்கு முன்னால் இருந்த கல்லில் உட்கார்ந்து பல் தேய்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அரசாங்க அதிபர் அவ்வழியாகக் குதிரைவண்டியில் குடும்பத்துடன் உலா வந்து கொண்டிருந்தார். நாவலரைக்கண்டதும், வண்டியை நிறுத்தி, திருவாளர் ஆறுமுகம், நீங்கள் உங்கள் சுவாமி மேல் (கல்லின்மேல்) உட்கார்ந்து பல் தேய்க்கலாமா? என்று கேலி செய்தார். நாவலர் சிரித்துக்கொண்டு வண்டிக்கு அருகே சென்று உள் இருந்தவர்களை யார் யார் என்று விசாரித்தார். ஒருவர் மனைவி, மற்றவர் மகள் என்று பதில் வந்தது. நாவலர் "நீங்கள் உங்கள் மனையாளுடன் நடப்பதுமாதிரி உங்கள் மகளுடனும் நடப்பீர்களா?" ஏஜெண்டதுரை வெட்கி வண்டியை விரட்டிச் சென்றார்.

### புரட்சி

சுவாமி விவேகானந்தர் கல்வியில் பெரும் புரட்சியை செய்தார். கல்விக்கு அவர் கொடுதத வியாக்கியானம்:-

"கல்வியாகப்பட்டது மனிதனுக்கு ஏற்கனவே இருக்கக்கூடிய அறிவை நினைவூட்டி விடுவதன் மூலம் அதனை விருத்தி செய்வது தான்!

சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம். இதற்காகத்தான் அவர் வாலிபர்கள் "இரும்புத் தசையும் உருக்கு நரம்பும் வைத்திருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். வேண்டினார்.

## நற் சிந்தனை

—:—

ஊரும் பேருமில்லா
ஒருவன் திருவடியை
நீரும் பூவும்போட்டு
நெக்குநிற்ப தெக்காலம்

## தெல்லிப்பழை-பாலர் ஞானோதய சபை 17 வது ஆண்டுப் பரிசளிப்பு விழா

மேற்படி சபையின் 17-வது ஆண்டுப் பரிசளிப்பு விழா ஆனிமீ 23உ (7-7-63) ஞாயிற்றுக்கிழமை மாலை காசிவிநாயகராலய மண்டபத்தில் முன்னாள் வடபெரும்பாக உதவி வித்தியாதரிசி உயர்திரு. அ. சரவணமுத்து அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாகக்கொண்டாடப் பட்டது.

பிற்பகல் 5-30மணியளவில் ஸ்ரீ காசிவிநாயகப் பெருமானுக்கு, விசேடபூசை நடைபெற்றது. அதன்மேல் மாணவர்களது கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ந்ததும் கூட்டம் ஆரம்பமாயது காரியதரிசி சி. பாலகிருஷ்ணன் அறிக்கை வாசித்ததும் தலைவர் பேசுகையில் எல்லோரும் ஒன்று சேர்ந்து வழிபட்டால் இறைவன் அருளைப் பெறலாமென்றும், இச்சபை 17 ஆண்டுகளாகத் தொடர்ந்து செயலாற்றி வருகின்றதென்றும், பெற்றோர்கள இச்சபை விஷயத்தில் கூடிய ஊக்கமெடுக்க வேண்டுமென்றும், வித்தியாசாலைகளில் போதிக்கப்படும் சமயபாடம் மாணவர்களுக்கு ஏற்றதாய் இல்லாமையால் இவ்விதம் சமய பாடத்தைக்கற்பது மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பமென்றும் கூறி, சபையின் இலட்சியங்களையும் எடுத்துரைத்தார்கள்.

அதன்மேல் "சமுதாயமும்-சமயமும்" என்னும் பொருள் பற்றி, உயர்திரு. சுவாமி மாதா சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி அவர்கள் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பல மாணவர்களது உடந்நியாசங்களும், தேவாரப் பாடல்களும் செல்வன் கு. தவராஜசிங்கத்தின் கதாப்பிரசங்கமும் நடைபெற்றபின், திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் (இந்துசாதன ஆசிரியர்) சபை செய்த சேவைகளைப் பாராட்டிப்பேசினார். பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் நன்றியுரை நிகழ்த்தியதும், தலைவரால் பரிசில்கள் வழங்கப்பட்டன. இரவு 9½ மணியளவில் தலைவர் நிறைவுரை, தேவார பாராயணம் [illegible] கூட்டம் இனிது [illegible]

சபையினரால் சைவசமய பாடப் பரீட்சையில் ஆரம்ப பிரவு, பாலர் கீழ்ப் பிரிவு, பால்ர் மேற்பிரிவு, மத்திய கீழ்ப்பிரிவு (நான்காம்வகுப்பு) மத்திய கீழ்ப்பிரிவு (ஐந்தாம் வகுப்பு) மத்திய மேற்பிரிவு, மேற்பிரிவு, உத்தம மேற்பிரிவு- 'பி' உத்தம மேற்பிரிவு 'ஏ' ஆகிய பிரிவுகளில் பரீட்சை நடாத்தப் பெற்றது.

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையோன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே,

x x x

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## ஈழத்துப் பண்டித கழகம் ஆராய்ச்சி விரிவுரையும் கலைப்பூங்கா வெளியீடும்

நாளை சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் ஈழத்துப் பண்டித கழகத்தின் ஆதரவில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் வித்துவான் க. வேந்தனார் அவர்களால் தொல்காப்பியம் புறத்திணையியல்பற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுநடைபெறும்

### கலைப்பூங்கா வெளியீடு

தொடர்ந்து கலாநிதி ஆ சதாசிவம், சோ. இளமுருகனார் ஆகிய அறிஞர்களை ஆசிரியர்களாகக்கொண்டு பல்கலைக் கழகப் பிரசுரமாக வெளிவரும் கலைப்பூங்கா ஏட்டின் வெளியீட்டு விழா திரு க. பி. கரன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திரு. சி. உ. சோமசேகரம், வடபெரும்பாக உதவி வித்தியாதிபதி நூலை வெளியிடுவார்.

வித்துவான் க. வேந்தனார், "கலைச்செல்வி" ஆசிரியர் சி. சரவணபவன், பண்டிதர் சு. வேலுப்பிள்ளை ("சு. வே") நாவேந்தன். பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை, செல்வி, நா. பாக்கியம், பண்டிதர் செ. துரைசிங்கம் ஆகியோர் கலைப்பூங்காபற்றிய நயனாய்வு உரை நிகழ்த்துவர்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் ஈழத்துப் பண்டித கழகம், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், இலக்கிய இரசிகர் சங்கம், தமிழ்ப் பாதுகாப்புக்கழகம் ஆகியவற்றின் ஆதரவில் இவ் விழா நடைபெறும்.

## மறைந்த தலைவருக்கு அனுதாபம்

சப்ததீவு இந்துமகாசபாவின் காரிய நிருவாகசபைக் கூட்டத்தில் தீவுப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வே. அ. கந்தையா அவர்களின் பிரிவை யிட்டு ஓர் அனுதாபப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது:-

"சமயம், சமூகம் ஆகிய துறைகளில் பெரும் சேவை ஆற்றிய மாபெருந்தலைவரின் பிரிவால் இலங்கைவாழ் தமிழ்ச் சமூகம் - பொதுவாகத் தீவு வாசிகள் துக்கக்கடலில் மூழ்கியுள்ளோம், திருமுறை விழாவை திறம்பட நடாத்தியவரும், தெய்வபக்தி, அறிவு, ஆற்றல் நேர்மை திடகாத்திரம் எடுத்த கருமத்தை முடிக்குந்திறன் பொருந்தியவருமான பெரியார் எம்மத்தியிலிருந்து பிரிந்தமை எமக்கு ஓர் பேரிழப்பாகும். அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதே நாம் அவருக்குச் செய்யும் தொண்டு. அன்னாரின் ஆன்மா சாந்திஅடைவதாக" இச்செய்தியை அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவிக்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

## சமாதான நீதிபதி

சென்பற்றிக்ஸ்கல்லூரி ஆசிரியரும், உறுதுணையாளர் சங்கத்தின் உறுப்பினரும், இன்னும் பல சமூக மருத்துவ பொருளியற் பணிகளிலெல்லாம் முன்னின்றுழைத்தவரும், முன்னின்றுழைத்து வருபவருமான திரு. C.W.D. அல்வின்ஸ் அவர்கள் புதிய சமாதான நீதவானாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

எதிர்வரும் வெள்ளி சனிக் கிழமைகளில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர் தீர்த்தத் திருவிழாக்கள் நடைபெற இருப்பதை முன்னிட்டு அவ்விரு தினங்களும் இந்துசாதன அலுவலகமும் சைவப்பிரகாச அச்சகமும் திறக்கப்படமாட்டா.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்
சோபகிருது ஆனி மீ உஅ உ வெள்ளிக்கிழமை

## யாத்திரை ஒழுங்குகள் பார்த்தல்

புராதன புனித தலங்களுக்குப் புண்ணிய முகூர்த்தப்பொழுதிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் யாத்திரை செய்வது வழக்கம். திருக்கேதீச்சரம், கதிர்காமம், நல்லூர். மாவிட்டபுரம், செல்வச் சந்நிதி, முன்னேசுவரம் முதலிய கோயில்களுக்குத் தேர்த் திருவிழாக் காலங்களில் எண்ணுக்கமையாத அன்பர்கள் செல்வார்கள். அவ்வாறே நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்குப் பெருந்திரளாகப் பக்தர்கள் போய்வருவர். இத்தலங்களுக்குப் போக்கு வரத்து வாகனங்கள் சுலபமாக அடையக்கூடிய சேவைகள் உண்டு; ஆனல் நயினை நாயகி கோயிலுக்கு யாத்திரை செய்யும் பக்தர்கள் எவ்வகையிலும் அலை பொலியும் கடல் கடக்க வேண்டும். அதுவும் ஆனி மாதத்தில் வேகமாய் வீசும் சோழகக் காற்றுடன் பொருதியே நாவாய்மீதுபயணம் பண்ண வேண்டும். பக்தர்கள் பல்லாயிரவர் எத்தனையோ காதவழிக் கடல்கடந்து எப்பொழுது ஆகம்மாளக்கெடுக்கும் அந்நோய்க்கு நன்மருந்தாம நாகம்மாள் வைகும் நயினையைக் காணலாம் என்று அன்புப் பெருக்கினுல் உந்தப்பெற்று முன்னேடியேசெல்வர். யாவரும் இவ்வாறு தம்மை மறந்து பக்தியினுல் ஏவப்பெற்று ஒருவரையொருவர் மூந்திக் கொண்டு போவதினுற் பயங்கரமான விபத்துக்கள் உண்டாகக் கூடும். வரிசை ஒழுங்கு வைத்துத் தொண்டர் சபையினர் பெரிதும் முயன்றனர். இருந்தும் பெருகிக் கொண்டுவந்த பக்தர் வெள்ளத்தை வழிப்படுத்துவது சுலபமாக முடியவில்லை.

இன்னும் இப்பெரும் விழாக் காலத்துக்கென்றே இயந்திரப்படகுகள் நாவாய்கள் தோணிகள் பல ஒழுங்கு செய்யப்பட்டன. ஏனினும் கப்பல் ஓட்டும் அன்பர்கள் மிகவும் சிரமமுற்றனர். சில வேளைகளிற் பயணஞ் செய்யக் கூடிய தொகையிலும் பார்க்க மேலதிகமான பிரயாணிகள் படகுகளில் ஏறிவிடுவார்கள். மிகச்சிறந்த தொண்டர்சேவை ஒழுங்குகள் இருந்தும் நிலைமை கட்டுக்கடங்கவில்லை யென்றும் பத்தர்கள் யாத்திரை செய்யும் சீரை நன்குணரவில்லை யென்றே சொல்லுதல் வேண்டும். வரிசை என்ற முறைக்குப் பணிந்து அன்பர்கள் அமைந்தால் எத்தனை ஆயிரம் மக்களையும் நாவாய்ச்சேவை அக்கரையிற் சேர்த்துவிடும். இதற்குப் பத்தர்கள் ஒழுங்காயமைந்தால் எல்லாம் இனிது நிறைவேறும்.

முந்நீர் கடந்து தீபகத்தை அடைந்துவிட்டால்நன்னீர் பெற நாடெங்கும் தேடும் நிலைமை நெருக்கடி தோன்றுவதை நினைக்கும் பொழுது அன்பர் அகத்தை அம்பாள் பரிசீலனை செய்கின்ருள் என்றே எண்ண வேண்டும். நான்மருங்கும அலைமோதும் ஆழி சூழ வான்புகழ் வண்ணத்தோடிலங்கும் நயினைத் திருத்தீவின் நயனம்போன்றிலங்கும் நாகபூஷணியம்மை ஆலயத்தின் வனப்பும் கோபுரத்தின் கவின்பெறு தோற்றமும் தொண்டர் படையினரின் சேவைச் சிறப்பும் பொலிந்து விளங்கக் கடலேயனைய ஆனந்தங்கண்ட அடியார் பல்லாயிரவர் பரவசமாய்ப் பரவி வணங்குங்காட்சியேகாட்சி. சப்பரத் திருவிழாக் கண்டு விடியற்காலையிலே நீராடி நீறணிந்து நாகம்மாளைப் போற்றி வணங்குவதற்கு அத்தனை ஆயிரம் மக்களுக்கும் ஏற்றஒழுங்குகள் செய்வதிலேயே இயலாமை தோன்றியது. இயற்கை நீர்வளம் இல்லாத இடத்தில் யாத்திரை அன்பர்கள் பல்லாயிரம் என்ருல் நீர்நிலையங்கள் எத்தனை வேண்டும்? குளங்கள் வேண்டும், கூபங்கள் வேண்டும், கிணறுகள் வேண்டும், கேணிகள் வேண்டும். எந்நாட்டவர்க்கும் இறைவி கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் பெருங்கொடையுடைய நயினைமக்கள் கைம்மாறு வேறு செய்ய வேண்டியதில்லை. நீர்நிலையங்கள் ஊர்கடோறும் உண்டாக்கி பரமன் பயிலுமிடம் கூடிக கும்பிடும் பக்தர்களுக்குப் பணிசெய்தாற் போதுமல்லமா?

## மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில்
# சமய அறிவுப் போட்டி

—:0:—

**இவ்வாண்டு மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் திருவிழாக்களை முன்னிட்டு தெல்லிப்பழைக் கிராம சபையினர் ஒரு சமய அறிவுப் போட்டியை நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர்.**

இப்போட்டியில் 15க்கு அதிகமான வயதுடையோர் கலந்துகொள்ளலாம் என்றும் மொத்தமாகப் 15 பரிசில்கள் வழங்கப்படும் என்றும், போட்டி மனுப் பத்திரம் — கேள்வித்தாள் ஒன்று 25 சத விலைக்கு தெல்லிப்பழைக் கிராமச் சபையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும், போட்டி விடைகள் தலைவர் கிராம சபை தெல்லிப்பழை என்ற முகவரிக்கு 29-7-63 பகல் 12 மணிக்கிடையில் வந்து சேரவேண்டும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

### சைவாசிரியர் சங்கப் பொதுக்கூட்டம்

14—7—63 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் புதிய மண்டபத்தில் நடைபெறும். சமயக் கல்வியில் ஈடுபடும் ஆசிரியர்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் அவர்கள் சமுகமளித்துக் கருத்தரங்கிற் பங்கு பற்றுவார்கள்

### ஓவியக் கண்காட்சி

இன்று மாலை 4 மணியிலிருந்து கச்சேரிக்கு எதிரிலுள்ள வை. எம். சி. ஏ. மண்டபத்தில் ஆரம்பமாக இருக்கும் பாக்கிஸ்தானிய ஓவியக கண்காட்சி தொடர்ந்து 16ம் திகதி வரை தினமும் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெற இருக்கிறது.

### தென்பலவை நடராசர் ஆலயக் கும்பாபிஷேகம்

வியாவிலான் சைவ பரிபாலனசபை, பலாலி தெற்கில் அமைந்திருககும் நடராசர் ஆலயக கும்பாபிடேகம் (12-7-63) இன்றுநடை பெறவிருக்கிறது.

# சூரிய ஒளிக்கும் கிழக்கு ஆன்மீக ஒளிக்கும் கிழக்கு

## விவேகானந்தர் நூற்ருண்டு விழா

அனுராதபுரம் விவேகானந்த சபையில் சுவாமி விவேகானந்தரின் நூற்ருண்டுவிழா 25-6 63 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சபைத் தலைவர் திரு. சி, நடராசா J P., U M. அவர்கள் தலைமையில் ஆரபபமாயிற்று. திருவாளர்கள் உப்பாளி குணரட்ண அரசாங்க அதிபர், B N. போஸ் முதலாவது செயலாளர்: இந்திய ஸ்தானீகர் காரியாலயம, கொழும்பு இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி ஸ்ரீ ரங்கானந்தா அவர்கள், பேராசிரியர் S. R துரைசுவாமி சாஸ்திரிகள் முக்கிய பேச்சாளர்களாக இருந்தார்கள்.

தமிழில் பேசிய சுவாமி ஸ்ரீ ரங்கானந்தா அவர்கள் மதத்தின் உலகாயதத்தன்மையை விரிவாக எடுத்துரைத்தார். கடைசியாக ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றிய பேராசிரியர் S, R. துரைசுவாமி சாஸ்திரியவர்கள் மேல்நாட்டார் செல்வத்தில் மூழ்கியிருப்பினும் அவர்கள் வாழ்கை இருளாகவேயுள்ளது. சூரியப்பிரகாசத்திற்கு அவர்கள் கிழக்கை நோக்குவதுபோல ஆத்மீக ஒளிக்குய கிழக்கை நோக்குகிருர்கள். நாம்தான் அவர்களுக்கு ஒளி கொடுப்பவர்களாக இருக்கிறோம. விவேகானந்தர் இப்பணியை நன்குபுரிந்தார், மனிதனிடம் இயல்பாக உள்ள சக்திகளே அவனை வெவ்வேறு வகையாக உருவாக்குகின்றன. இப்படியான இயற்கையான பல சக்திகளைத் தன்னகத்தே கொண்டவர்தான் சுவாமி விவேகானந்தா இவர் தமது ஆற்றலினுல் மனிதத்தன்மையின் பெருமையினைச் சிறப்பித்து இதை அமெரிக்காவரையில் அறியச் செய்தார்.

கடைசியாக சபையின் செயலாளர் திரு. த. நடராசன் நன்றிகூறினுர். நூற்ருண்டுவிழா ஞாபகார்த்தமாக "விவேகானந்தர்" என்ற மலரும் கூட்டுப்பிரார்த்தனைக்குரிய "பஜனவளி"யும் அன்று வெளியிடப்பட்டு வினியோகிக்கப்பட்டன.

### நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராசேஸ்வரி அம்பாள் திருவிழா

யாழ். நாயன்மார்கட்டு பேச்சியம்மன் என வழங்கும்ஸ்ரீ இராசஇராசேஸ்வரி அம்பாள தேவிஸ்தானத்தில் இன்று (12-7-63) சங்காபிடேகம் நடைபெறுகிறது வருகின்ற ஞாயிற்றுக்கிழமை (14-7-63) நடைபெறவிருக்கும் கொடியேற்றத்தைத்தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறும்.

### கூட்டுறவாளர் தினம்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை ஆதரவில் 13-7-63 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம், 14-7-63 ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிவரை சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழாக் கொண்டாட்டம் யாழ்ப்பாணத்தில் மத்தியகல்லூரிமண்டபத்திலும் திறந்த வெளி அரங்கிலும் நடைபெறும்.

### மாணிக்கவாசகர் குருபூசை

ஷ குருபூசை தெல்லிப்பழை - பாலர் ஞானேதய சபையினரால் 26-6-63 திங்கட்கிழமை சபைத்தலைவர் தலைமையில் காசிவிநாயகர் ஆலயமண்டபத்தில்கொண்டாடப்பட்டது மாலை 4 மணியளவில் ஸ்ரீகாசி விநாயகப்பெருமானுக்கும் மணிவாசகப்பெருமானின் திருவுருவப்படத்திற்கும்விசேட ஆராதனைகள் நடைபெற்றன அதன்மேல் நடைபெற்றகூட்டத்தில் தலைவர் திருவாசகத்தின் மேன்மையை எடுத்துரைத்தார். பல மாணவ மாணவிகளது தேவார - உபந்நியாசங்களும் இடம்பெற்றன.

### கொழும்பு சிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோயில்

—0—

கொழும்பு சிந்துப்பிட்டி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாதந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுவரும் கூட்டுவழிபாடு பிரசங்கம் ஆகியனவற்றின் இம் மாதநிகழ்ச்சிகளாக14-7-63ல் கூட்டுப் பிரார்த்தனையும் சீதையின் சிறைவாசம் என்னும் சொற்பொழிவும் 21-7-63-ல் கூட்டுவழிபாட்டுடன் பக்கவாத்திய சகிதம் தேவார இன்னிசைக் கச்சேரியும் 28-7-63-ல் கூட்டுப் பிரார்த்தனையும் "கலியுக வரதன்" என்ற சொற்பொழிவும் நடைபெறஇருக்கின்றன.

## சீமானே நீ ஆடுவாய்

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : பைரவி :: தாளம் : ஆதி

**பல்லவி**

சீமானே நீ ஆடுவாய் — செல்வச்
சீமாட்டி ஒரு பாகனே த்யாகனே (சீ)

**அநுபல்லவி**

பூமாலை திருப் புகழ்மாலை தலை
புனையடியார்கள் பொலிய அருளுங்கலைச் (சீ)

**சரணங்கள்**

(1) பாம்பு படம் விரித்துப் பாய்ந்து பாய்ந்தாட
படரும் திருச்சடையில் பனிமதி ஓட
பாம்பு புலிமுனிகள் பணிசெய்து பாட
பங்கய னங்கையில் பதலயம் போட (சீ)

(2) அன்னபூ ரணிமனை யாளா யிருக்க
ஆனைமுக கன்மறை யமுதம் பெருக்க
மன்னுஸ்ரீ ரங்கன் வளர்நிதி சுரக்க
பலிப்ப ரண்டம் மயிலவன் புரக்த. (சீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பக்தியின் வலிமை

— சுவாமி சிவானந்தர் —

ஒரு மாணாக்கன் பெருக்கு மிக்க வாழ்க்கை நதியைக் கடப்பதற்கு உதவும் தோணியின் இரு துடுப்புக்களைப்போன்றவை குரு பக்தியும், குருசேவையும். குருவிடம் தன்னை அடைக்கலம் செய்துகொண்ட ஒருவன், குருவுக்கு முழுமனதுடன் பணிசெய்யும் ஒருவன், பெரும் குருபக்தி உள்ள ஒருவன் எவ்வித துன்பமும், துக்கமும், அச்சமும், வேதனையும், குழப்பமும், மடைமையும் அறியான்; விளைவாக நிச்சயம் தெய்வ தரிசனத்தைப் பெறுவான்.

அறியவேண்டியதை அறிந்த ஒருவரும் அடைய வேண்டியதை அடைந்த ஒருவரும் வழிகாட்டக்கூடிய தகைமை உள்ள ஒருவருமான குருவுக்கு ஓர் அடியவன் தன்னைப் பணிவுள்ளவனுக்கி அவர் திருவடித் தாமரையில் புகலிடம் தேடிக்கொள்வானுகில் அவன் மூன்று தடவைகள் ஆசீர்வதிக்கப்பட்டவனுவான் என்பதை அறிவானுக.

உன்னுடைய குருவுக்கு தயக்கமின்றிக்கீழ்ப்படிந்து அதனைக் கடைப்பிடிக்க விடாமுயற்சி கொள்வாயாக. கீழ்ப்படிவு செயல் முறையானதாகவும் முழுமனதுடன் கைக்கொள்ளப்படுவதாகவும் ஊலயானதாகவும் இருக்கவேண்டும். குருவின் கட்டளைகளை முழு முயற்சியுடன் முடிந்தளவு செயல்படுத்த ஓர் அடியவன் முயலவானுகில் அப்பொழுதுதான் குருவின் அருள் அவன்மீது இறங்கிப் படர்ந்து அவன் ஆன்ம தரிசனம் பெறும் இலட்சியத்தினை விரைந்து அடைய உதவி புரிகின்றது.


## எஃப். ஜீவாஜி சகோதரர்கள்

### மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான காகிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பேனை, பலவித மட்டைகள், சோடனைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்,

ஜுபிலி பஜார், இலக்கம் 9, மின்சார நிலைய வீதி, (ராணி சினிமாவுக்கருகில்) யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்:
ஜீவாஜி சகோதரர்கள்,
50. புதிய சோனகதெரு கொழும்பு-12

கிளை:
இன்டிப்பெண்டன் ரேடிங்கொம்பனி,
51A, 1-ம் குறுக்குத்தெரு
கொழும்பு – 11

தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 12,


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திரிக்கோட்டிலே

மானிப்பாய்
சபாபதி சவுந்தரநாயகம் மகள்
மல்லிகாதேவி —வழக்காளி.
இல. M.B. 3639.

எதிராக

மானிப்பாய். ஆனல் தற்போது முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு
1. ஆறுமுகம் குமாரசுவாமியும்
2. பெண் நாகம்மாவும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M.B. 3639-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகளை 1963-ம் ஆ ஆவணி மீ 17-ந உ சனிக்கிழமை 17-8-1963) முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வக் காணிகளுக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 6850-ம். இன்னும் ரூபா 6000-க்கு 23-9-60 தொடக்கம் 3-5-61 வரை 12% வட்டியும் கூடிய தொகைக்கு 3-5-61 தொடக்கம் இறுபடும்வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 258-95 ம், ஆனல் இதில் கொடுபட்ட கோட்டுச் செலவு ரூபா 150-ம், இன்னும் 2-8-61 ல் கொடுபட்ட பணம் ரூபா 1000-ம் கழிபட வேண்டும்.

காணிகளின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க்கோவிற்பற்று மானிப்பாய் இறை "எளுமுள்ளியும், தியாகர் தோட்டமும்" நில. பர. (9) ஒன்பது குளி (12) பன்னிரண்டும், இதற்கெல்லை கிழக்கு சின்னத்தம்பி சபாபதியின் உரிமைக்காரருக்கும் தியாகராசா பெண் ஆச்சிக்குட்டிக்குரிய ஆதனங்கள், வடக்கு அம்பலம் கனக சபையினுதனமும், தூர்வை நிலமும், இக்காணிக்கு வரும் ஒழுங்கையும், மேற்கு தம்பிப்பிள்ளை தம்பித்துரைக்கும் பெண் சிவக் கொழுந்துவுக்கும் உரிய ஆதனமும் தூர்வை நிலமும், கிணற்றுப் பாவிப்புக்குரிய ஒழுங்கையும், இக்காணிக்கு வரும் ஒழுங்கை முகப்பும் கந்தையா பெண் மீனும் பாவினுதனமும். தெற்கு தூர்வை நிலமும் செல்லப்பா வயிரமுத்து வினுதனமும். இதடங்கலும் இன்னும் செய்பயிர்களும், மேற்கெல்லைத் தூர்வை நிலத்தில பங்கும், கிணற்றுப்பங்கும், மேற்கு ரோட்டிலிருந்து இக்காணிக்கும் கிணற்றுக்கும் வரும் ஒழுங்கைப்பங்கும், வழிப்பாதைப்பங்கும் குறித்த வழிப்பாதையில் நிற்கும் ஒரு பலா மரமும். இக்காணிக்கு வரும் குறித்த ஒழுங்கையில் நிற்கும் ஒரு தென்னையும். பதிவு E. 320/37.

2 ஷை மானிப்பாய் இறை "எளுமுள்ளி தியாகர் தோட்டம், அல்லது தியாக தோட்டம்" நில. பர.(4) நாலு குளி(11) பதினென்றும். இதற்கெல்லை கிழக்கு சபாபதி ஆனந்த நடராசாவுக்கும் பெண் புஷ்பராணிக்குமுரிய ஆதனம். வடக்கு அம்பலம் கனக சபையினுதனம். மேற்கும், தெற்கும் ஒழுங்கை, இதடங்கலும் கல்வீடும் பயிர்வகைகளும். இதன் கிழக்கெல்லைக்காணியின் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றுப் பங்கும் தூர்வை வழிவாய்க்காலுரித்தும். பதிவு E. 337/256.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
இல:45, 4-ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம், 8-7-63.
M 76 12-7-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நாகலிங்கம் செல்லத்துரை — இரிமலை —வழக்காளி.
இல- MB. 4528

எதிராக;
1. வேலு கந்தையாவும் மனைவி
2. பாறுபதி - சிவன்கோவில் தோட்டம், கந்தர்மடம் —எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் MB. 4528-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணி 1963-ம் ஆண்டு ஆவணி மாதம் 10-ந் திகதி சனிக்கிழமை (10-8-63) காலை 10½மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 4333/34-ம். 18-1-62 தொடக்கம் 12-6-62வரையில் ரூபா 4000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும்வரை முழுத்தீர்வைததொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 224/10-ம்.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக வண்ணர்பண்ணை வடகிழக்கிறை வண்ணர்பண்ணை கோயில்பற்று "நீர்விலயடி" அல்லது "நீர் நொச்சியடி" இரு பிரிவுகளாக நிலப்பரப்பு (20-ம்—10-ம்) கூடிய நிலப்பரப்பு 30. இதல் அளவைக்காரர் J. D. வீரசிங்கம் அவர்களால் 1948-ம் ஆண்டு தை மாதம் 28-ம் திகதி தயாரிக்கப்பட்ட 2242-ம் படத்தின்படி நிர்ணயப்படுத்திய நிலப்பரப்பு 2 - 13 குளி கொண்ட 8-ம் துண்டும் கல்வீடும் 10-ம் துண்டிலிருக்கும் கிணற்றில் பங்கும், அதைச்சேர்ந்தவைகளும் 15-ம் துண்டுக்கு ஊடாக உள்ள வழிப்பாதையும், 15-ம் துண்டிலிருந்து தெற்கேயுள்ள றேட்டுக்குப் போகும் ஒழுங்கையும், படத்தில் காட்டப்பட்ட 6-ம் துண்டிலுள்ள கிணற்றில் பங்கு ஏதும் இருந்தாலும் அது புறநீக்கலாகவும்.

இந்த நிலப்பரப்பு 2 - குளி 13-க்கு எல்லை கிழக்கு கை ஒழுங்கை, வடக்கு பரமனுதர் சரவணபெருமானின் ஆதனம் மேற்கு முதலாம் துண்டும் 15-ம் துண்டெனக் காட்டப்பட்ட கை ஒழுங்கையும், தெற்கு 9-ம்துண்டு-16-ம் துண்டின் வடக்கெல்லை வேலியும் 16-ம் துண்டின் மேற்கேயுள்ள ஒழுங்கையின் கிழக்கு மேற்கு இருவேலிகள் 16-ம் துண்டின் சொந்தக்காரருக்கு உரியது.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 11-7-63.
M. 77 12-7-63.

## சங்காபிஷேகம்

சென்ற 10-7-63 புதன் கிழமை உரும்பராய் கற்பக கற்பகப்பிள்ளையார் கோவிலில் மகாசங்காபிஷேகம் நடைபெற்றது.

அன்று மாலை 7 மணியளவில் திரு. சீ. விநாசித்தம்பி (அளவையூர் சஞ்சீவி) அவர்களின் காலனை வென்ற பாலன் என்ற கதாப்பிரசங்கமும் நடைபெற்றது.

## நன்கொடை

திருநாவுக்கரசு சுவாமிகள் திரு அவதாரம் செய்த திருவாமூரில் நினைவு ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டு ஆடி 14ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெறும். இந் நிகழ்ச்சியின் போது தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ரூ 10001/= நன்கொடை வழங்குவார்கள்.

## முத்தமிழ் மன்றம்

6-7-63 சனிக்கிழமை அ. இ பொ.சே. சங்க முத்தமிழ் மன்றத்தின் 5-வது வருடாந்தக் கூட்டம் நல்லூர் தெற்கு ஜனசமூக நிலையத்தில் நடைபெற்றது. அதன் தலைவர் திரு. சி. வயித்திலிங்கம் தலைமை தாங்கினர். செயலாளர் திரு. த இராசரத்தினம் உட்படப் பலர் பேசினர். இம் மன்றம் அரங்கேற்றிய நாடகம் 24-7-63ல் திருநெல்வேலி காளி கோவலடியில் நடைபெற இருப்பதாகவும் யாவரையும் ஒத்துழைத்து 28-வது நாடகத்தை விரைவில் அரங்கேற்ற நாடக ஆசிரியர் திரு வி. சி குஞ்சிதபாதத்திற்கு உதவுமாறு வேண்டிக்கொண்டார். புது வருட நிர்வாகிகள் தேர்தலும் நடைபெற்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

இல. M.B, 4415,

பாசையூர்
சந்திய விசேந்திப்பிள்ளை கைம்பெண் மரியம்மாவும், மகன் கிறிஸ்ரீன் அம்மாவும் பராமரிப்புக் காரியாரும்.
வழக்காளிகள்.

எதிராக
(1) போதிரு அல்போன்சும் மனைவி
(2) அன்னம்மா
(3) விசேந்திப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
(4) விசேந்திப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
(5) விசேந்திப்பிள்ளை யோக்கிம்பிள்ளை
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B 4415 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆதனம் 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை (17-8-63) பிற்பகல் 4 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 3770 உம் 28-11-61 தொடக்கம் 22-3-62 வரைக்கும் ரூபா 2000 - க்கும் 12 வீத வட்டியும் அதன் பின் கூடிய முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கொடுக்கும் வரையும் இறுக்க வேண்டும், இதில் கோட்டுச் செலவு ரூபா 427-72 சதம். இதில் ரூபா 125. கழிவு

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளி இறை "விழுக்குளம் புலம், விளங்குள வளவு" என்னும் காணி நில, பர. 8 6/10 குளி. இது உலாந்தா அளவையாளர் J. மனுவலால் 1945 ம் ஆண்டு வைகாசி மாதம் 28 ம் திகதி அளக்கப்பட்டது. இதில் கல்வீடும் அடுக்களையும், மலசலகூடமும் எல்லை கிழக்கு அந்தோனியார் கோயிலும் வடக்கு பிலிப்பு கவுரியின் ஆதனமும். மேற்கு றேட்டும். தெற்கு அந்தோனியார் கோயிலும் ஒழுங்கையும் உண்டு.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனர்.
நம், 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
M 70 12-7-63,

இவ்வாரம் 14-7-63 — 20-7-63

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

போட்டியிடுவோரை மூந்தவும், தடைகளைத்தாண்டவும் முடியும். பணமளவில் ஓரளவு நல்ல வாரம். சகோதர சகோதரியர் மிக உதவுவர். மனநிம்மதி இருக்காது.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

பணமளவில் நல்ல வாரம், தொழில் வெற்றியும் புகழும் நிச்சயம். ஆனல் உடல்நிலை ஊறுபடும், சண்டைகளைக் கட்டிக்கொள்வதில் முந்தி நிற்பீர். தந்தைவழி உறவினர் தொல்லை தருவர்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம், 3ம் பாதம்.

வெற்றிக்காகக் கடுமையாக உழைக்கவேண்டிவரும். இனத்தவருடன் சண்டைகள் உண்டாம். குடும்ப அமைதி இருக்காது நண்பர்கள் இடரிலிருந்து காப்பர்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

தம்பி தங்கைகள் உதவுவர். சிலபுலங்களால் இலாபம் நிச்சயம். ஆனல் சில பெரும் செலவுகளைச் சந்திக்கவேண்டிவரும்,

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

சண்டைகளைக் கட்டிக்கொள்வதில் முந்திநிற்பீர், ஞாயிறு காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும். பணமளவில் ஓரளவு நல்ல வாரம், உடல்நிலை ஊறுபடும்.

கன்னிராசி உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஞாயிறு மாலை, திங்கள், செவ்வாய் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். மிகுதி நாட்கள் புது அலுவல்களுக்குச் சாதகமாகவும் ... உடல்நிலை ஊறுபடும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

வழக்குகள்பற்றி எச்சரிக்கையாக இருக்கவும் தந்தைவழி உறவினர்கள் சில தொல்லைகளை உண்டுபண்ணுவர். செவ்வாய் மாலை, புதன் வியாழன் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். வார மிகுதிப்பகுதி ஓரளவு சாதகமானது.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

தொழில் வெற்றி நிச்சயம். சிலபுலங்களால் லாபம் உண்டாம். நண்பர்களும் சகோதரரும் மிக உதவுவர். வியாழன் மாலை வெள்ளி சனியை எச்சரிக்கையோடு கழிக்குக.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

வெற்றிக்காகக் கடுமையாகப் பாடுபடவேண்டிவரும், குடும்ப நிலை திருப்தியாயிருக்காது. சில புலங்களால் இலாபம் உண்டாம். சிறு உடல் நிலைக் குழப்பங்கள் உண்டாம். சனி மாலையை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

மகரராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

நண்பர்கள் உறவினருடன் சண்டையிடுவீர், தந்தையாரின் உடல்நிலை பாதிக்கப்படும். எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

அலுவலகத்தில் மோதல்கள் உண்டாம், சிறு உடல் நிலைக் கோளாறுகளுக்கும் இடமுண்டு மன நிம்மதி இருக்காது- ஆனல் பணமளவில் நல்ல வாரம்,

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உடல்நிலை திருப்தியற்றிருக்கும் குடும்பக்குழப்பங்களும் நண்பர்களுடன் மோதல்களும் ஏற்படலாம். பழைய முதலீடுகள் நற்பலனைத்தரும். விவசாய ஈடுபாடுகளில் வெற்றிஉண்டாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

# பணம் உதவினோர் பட்டியல்

1—6—62 தொடக்கம் 30—4—63 வரை

கடையிற்சுவாமி குருவார அன்னசத்திரத்திற்கு மின்சார விளக்குகள் போடவும், கம்பிக்கதவு போடவும், அன்னதானத் திற்கும் பண உதவிபுரிந்தவர்கள்,

| திருவாளர்கள், | ரூ. ச. |
|---|---|
| சி. எஸ். கந்தையாச்செட்டியார், அன் பிறதேஸ் | 51 00 |
| ச. செல்லப்பா, ஸ்ரான்லி வீதி | 50 00 |
| எஸ். முருகேசு, 249/A நாவலர் வீதி | 50 00 |
| எஸ், கனகசபை (சிறுப்பர்) | 50 00 |
| ரி, சிவசுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோஸ்) | 40 00 |
| ஆர். சி. மன்மதராயன் | 55 00 |
| ரி. பாலசிங்கம் (முருகன் ஸ்ரோஸ்) | 25 00 |
| ஆ. நா. கந்தையா (மயில்வாகனம் ஸ்ரோஸ்) | 25 00 |
| ஏ. சி. இராசையா (வைத்தியர்) | 25 00 |
| வே. ப. சண்முகநாதன், பிறவுண் ரோட் | 25 00 |
| வி. எம். கே, சோமசுந்தரம், கன்னாதிட்டி | 25 00 |
| சி. உமாபதிசிவம், நாவலா வீதி | 25 00 |
| என். கேசவன் (கருச்) நாவலர் வீதி | 25 00 |
| எஸ். எஸ். நடராசா, கந்தர்மடம் | 25 00 |
| திருமதி. ப. க. வாளரசன் | 25 00 |
| டாக்டர். பி. எஸ். சுப்பிரமணியம் | 25 00 |
| வி, ரி. துரையப்பா | 25 00 |
| எஸ். ஆர்- குமாரசாமி, பலாலி ரோட் | 25 00 |
| நா. த. செல்லத்துரை, ஸ்ரான்லி வீதி | 25 00 |
| பொ. அம்பலவாணர் (நகைமாளிகை) கஸ்தூரியார் வீதி | 25 00 |
| க. வேலுப்பிள்ளை (ஓவசியர்) தலையாழி ஒழுங்கை | 25 00 |
| எஸ். கனகரெத்தினம் (நகைமாளிகை) கன்னாதிட்டி | 25 00 |
| பி கனகரெத்தினம், தலையாழி | 15 00 |
| வி, கனகரெத்தினம் (ஜே. எம். சி) வைத்தியர் | 15 00 |
| கே, வி. தம்பு சிறும்பியடி | 15 00 |
| ஈ. பி. இராசையா (ஜே. பி) | 15 00 |
| எஸ் வேலுப்பிள்ளை (சிறுப்பர்) | 25 00 |
| சு. பொ. கந்தையா | 30 00 |
| பி, எஸ். ஜெகநாதன் செட்டியார் | 15 00 |
| ஏ. ஜெகநாதன், 245 நாவலர் வீதி | 10 00 |
| வி. தம்பிராசா, நாவலர் வீதி | 10 00 |
| கே. பொன்னையா, நாவலர் வீதி | 10 00 |
| ரி. சோமசுந்தரம், கந்தர்மட ஒழுங்கை | 10 00 |
| பொதுநலம்விரும்பி | 10 00 |
| கே, கதிரவேலு (மரவியாபாரம்) | 10 00 |
| டாக்டர் கே, களகசபாபதி | 10 00 |
| ரி. நாகரெட்ணம் கந்தர்மட ஒழுங்கை | 10 00 |
| மூ. தில்லையம்பலம் (புடைவை வியாபாரம்) பெரியகடை | 10 00 |
| கே. எஸ். பொன்னம்பலம் பலாலி வீதி | 5 00 |
| எஸ். இராமையா அன் சன்ஸ் | 3 00 |
| த. முத்துசாமிப்பிள்ளை | 25 00 |
| | 949 00 |

**1-6-62 தொடக்கம் 30-4-63 வரை கடையிற்சுவாமி குருவார அன்ன சத்திரத்திற்குப் பொருளுதவி புரிந்தவர்கள்**

திருவாளர்கள்

த. சண்முகராசா (விஜயலக்ஷ்மி மில்ஸ்) புன்னாலைக்கட்டுவன் ஒரு மூடை அரிசி

ச. இராசரெத்தினம் புன்னாலைக்கட்டுவன் ஒருமூடை அரிசி

வி. எஸ். கந்தையா நெல்லியடி ஒரு மூடை அரிசி

க. தவராசா (லெக்ஷ்மி மில்ஸ்) அல்வாய் ஒரு மூடை அரிசி

எஸ். செல்லததுரை யாழ்தேவி மில்ஸ் வட்டுக்கோட்டை ஒரு மூடை அரிசி

திருச்செல்வம் செல்வம்மில்ஸ் அரை மூடை அரிசி

வைரமுத்து புன்னாலைக்கட்டுவன் அரைப் புசல் அரிசி

ஸ், வல்லிபுரம் நெல்லியடி அரைப் புசல் அரிசி

ஆர். சி. மன்மதராயன் ஒன்றரைப் புசல் அரிசி

சின்னன் நெல்லியடி கால் புசல் அரிசி

எஸ் இராமையா அன் சன்ஸ் 3 படி அரிசி

ஏ. எஸ். சங்கரப்பிள்ளை அன் பிறதேஸ் 14 ரூத்தல் மிளகாய் 7 ரூத்தல் மல்லி

ஏ. ஜே. வீடு பெரியகடை யாழ்ப்பாணம் 1 கூடை உருளைக்கிழங்கு

எஸ். எம். எஸ். பெரியகடை யாழ்ப்பாணம் 14 ரூத்தல் மல்லி

ந. மகேசன் கொட்டடி 14 ரூத்தல் மைசூர்ப் பருப்பு

கிருஷ்ணாஸ்ஸ்ரோஸ் பெரியகடை 14ரூ. மைசூர்ப்பருப்பு 14ரூ. உப்பு

எம், எம். ரி. பி, 28 ரூததல் கிழங்கு

கே. கே. ஏ, கந்தையாபிள்ளை பெரியகடை 14 ரூ, புளி.

மூ, குமாரசாமிப்பிள்ளை பெரியகடை 2 ரூத் பூடு

மூ, மாணிக்கவாசகர் 3 ரூத் சர்க்கரை

ச, பொன்னம்பலம் குப்பிளான் 1 டின் தயிர்

எஸ், வி, பி, அன் சன்ஸ் ஆவரங்கால் 1 டின் தயிர்,

ஆ வேலுப்பிள்ளை சிறும்பியடி 2 தூக்கு விறகு

ந. நித்தியானந்தன் 1 தூக்கு விறகு (சிறும்பியடி)

எஸ். பாலசிங்கம் வண்ணார்பண்ணை மரககாலை நாவலர்வீதி 2 தூக்கு விறகு

**கடையிற்சாமி குருவார அன்னசத்திரத்திலிருந்து பிரயோசனப் பொருள்கள் விற்றுவந்தபணம்**

| | ரூ. சதம் |
|---|---|
| மாங்காய் | 10 00 |
| புல் | 5 00 |
| கராச்காரரிடமிருந்து | 150 00 |
| அன்னதானத்தில் மிஞ்சியபொருளை விற்றுவந்த பணம் | 225 00 |
| | 390 00 |
| | 949 00 |
| மொத்த வரவு | 1339 00 |

| செலவு | ரூ. சதம் |
|---|---|
| அன்னதானச் செலவு | 208 18 |
| கம்பிக்கதவிற்கும், தூண்கட்டியதற்கும் | 382 00 |
| மின்சார விளக்குப் போட்ட கூலி | 50 00 |
| ,, சாமான்கள் வேண்டியது | 335 41 |
| சேவிஸ் சாச்செஸ் | 188 00 |
| கோட்டுச் செலவு | 155 80 |
| மொத்தச் செலவு | 1319 39 |

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

S d. 14.

**கோட்டு விற்பனவு விளம்பரம்**

—:—

புங்குடுதீவு மேற்கு
(1) எஸ். வேலுப்பிள்ளை ஐயாத்துரையும்
(2) பெண் மகேஸ்வரியும்
வழக்காளிகள்

இல. M B 3947

எதிராக

புங்குடுதீவு மேற்கு
(1) சின்னத்தம்பி ஆறுமுகம்
(2) இராசையா சோமு
(3) பெண் தங்கம்மாவும்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3947 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1963 ஷு ஆடி மீ 20 ட சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும் 11 மணிக்கு இரண்டாம்காணியும் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 400- உம் 7-3-61 தொடக்கம் முழுத் தொகை இறுக்கும்வரை ஐந்துவீத சட்ட வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 139-16 உம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்தீவுப்பகுதி புங்குடுதீவு மேற்கு புங்குடுதீவு கோயிற்பற்று 'பறண்ட தோட்டத்து கிழக்கு ருசதெருவுக்கு வடக்கு "பர. வில. இல 15. D செய்பயிர் கிணறுடன் எல்லை கிழக்கு சின்னையா கணபதிப்பிள்ளையினுதனம். வடக்கு மாரிமுத்து இராமலிங்கத்தினுதனம். மேற்கு நடைபாதைக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணி. தெற்கு அருளைவா பெண் நாகேஸ்வரியினுதனம். இதடங்கலில் பிரிவிடப்படாத ½ பங்கு, இல. C 145/89 இதன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) ஷை இறை 'கட்டுப்புலம் பர வில இலா 22½-O வீடு கிணறு செய்பயிர் வான் பயிர்களுடன் எல்லை கிழக்கு சுப்பிரமணியம் பெண் பொன்னம்மாவினுதனம், வடக்கு இளையவன் பெண் மரியாளுககும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு கார்த்திகேசு பெண் இராமாசிப்பிள்ளையினுதனம். தெற்கு கந்தையா பெண் இராமாசிப்பிள்ளையினுதனம். இதடங்கலில் பிரிவிடப்படாத பர வில இலா 1 – 12 குளியும் அதைச்சேர்ந்தவையும் C 184/150 இலககத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுளளது.

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்.
133 பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்,
30-6-63,
M 72 12-7-63

**மாவிட்டபுரம் தேர்**

எதிர்வரும் 19 - 7 - 63 வெள்ளிக்கிமை மாவிட்டபுரக்கந்தசுவாமிகோயில்தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற இருக்கின்றன.

**1-6-62 தொடக்கம் 30-4-63 வரைஉள்ள உரோக்க வரவு செலவுக் கணக்கு**

| | வரவு | செலவு |
|---|---|---|
| கோட்டுச்செலவிற்காக | 110 00 | |
| அடியார்கள் உதவியபணம் | 839 00 | |
| மாங்காய் புல் விற்றது | 15 00 | |
| கரேஜ் வாடகை | 150 00 | |
| மிகுதஅன்னதானப்பொருள்விற்.வரவு | 225 00 | |
| அன்னதானச் செலவு | | 208 18 |
| இரும்புக்கேற் தூண் கட்ட | | 382 00 |
| மின்சார விளக்கு போட்டவகையில் | | 573 41 |
| கோட்டுச் செலவு | | 155 80 |
| உரோக்க இருப்பு | | 19 61 |
| | 1339-00 | 1339-00 |

த. முத்துச்சாமிப்பிள்ளை
சு. பொ. கந்தையா
செ. மன்மதராயன்

21-5-63,

M. 69, 12-7-63.

**அணிந்துரை அரங்கம்**

**பொது அறிவு வினவிடை பகுதி இரண்டு**

ஆக்கியவர்:
ந. சி. கந்தையாபிள்ளை

வெளியீடு:
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,
53 – 56 பவழக்காரத்தெரு.
சென்னை —1.

விலை: ரூபா: 1-50.

சைவ சமயம், இந்துசமயம் ஆகியவற்றின் பண்டைய நாட் தொடங்கிய வரலாறு பற்றிய நூல்களும் அகராதி நூல்களும் வேறு பிற கட்டுரை நூல்களும் ஏராளமாக எழுதியுள்ள இந்நூலாசிரியர், வினவிடைகள் மூலம் பொது அறிவையே அன்றி ஒவ்வொரு துறையிலும் சிறப்பறிவு தரக்கூடிய கருத்துக்கருவூலங்களையும், இந்நூலில்நிறைத்துள்ளார், மாணவர்கள்தொடக்கம் வயதானோர்வரை சுருங்கிய செலவில் பரந்த அறிவைப்பெற ஆதாரமாக இருக்கும் சிறந்த நூல் பொது அறிவு வினவிடை - பகுதி இரண்டு.

**கோட்டு விற்பனவு விளம்பரம்**

இல. M.B, 4735
யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

சுதுமலை
1. சரவணமுத்து பொன்னம்பலம் மனைவி
2. சரசுவதி —வழக்காளிகள்.
எதிராக
1, ஆறுமுகம் பொன்னம்பலம் மனைவி
2. செல்லம்மா
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிகோட்டின் M,B. 4735-ம் இலக்க வழக்கில் எனககுக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணியும் 1963-ம் ஆண்டு ஆவணி மாதம் 17 ம்-திகதி சனிக்கிழமை (17-8-63) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-

முதல் வட்டி ரூபா 7050-62 சதமும் 29 - 3 – 62 தொடக்கம் 14-11-62 வரையும் ரூபா 5000-க்கும் 9% வட்டியும் அதன்பின் கூடிய முழுதொகைக்கும் 5% வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும், இதில் கோட்டுச் செலவு ரூபா 499-20 சதம். அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 337-05 சதம், வெலியாத்துச் செலவு ரூபா 61-95 சதம். வரும் செலவு ரூபா 50-20 சதம்.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் மானிப்பாய் கோயிற்பற்று சுதுமலை இறை "கம்பனர் ஓடை" என்னும் காணி வில. பர. 2,⅝ இதில் வடக்குப்பக்கத்துக் காணியில் தண்ணீர்ப்பங்கும், கிழககுப்பக்கத்துக்காணியில் வழிவாய்க்காலும், எல்லை கிழக்கு ஒழுங்கையும், சின்னத்தம்பியின் மகள் நாகம்மாவும். வடக்கு மேற்கூறிய காணியும். மேற்கு ஒழுங்கையும், தெற்கு பொன்னுத்துரையின் மனைவி கமலாம்பிகையின் ஆதனமும் உண்டு.

2. மேற்படி கூறிய கோயிற்பற்றும், இறையும். "கம்பனர் ஓடை" என்னும் காணி வில. பர. 8. இதில் செய்பயிர் வான் பயிரும், கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் உண்டு. எல்லை கிழக்கு சோமசுந்தரம் கைம்பெண் நாகம்மாவும் மற்றவர்களும். வடக்கு ரோட்டும், மேற்கு ஒழுங்கையும், தெற்கு முன்கூறிய காணியும் உண்டு. இதில் பிரிக்கப்படாத அரைவாசிப்பங்கு,

இ கனகரெத்தினம்,
கொம்மிஷனரும்,
விலைமதிப்பாளரும்.
நம்-35 கொழும்புத்துறைவீதி
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M. 71 12-7-63.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 12-7-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org